JESUS REDEEMS MINISTRIES

'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்கள்!

# 16வது தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் - 2021




भारत निर्वाचन आयोग ELECTION COMMISSION OF INDIA

Pray for Tamilnadu Assembly Election 2021

"...உன்னதமான தேவன் மனுஷரின் இராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமானவனை அதின் மேல் அதிகாரியாக்குகிறார்..." (தானியேல் 5:21)

# உங்கள் சகோதரனிடமிருந்து,



இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில்,

உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!

மிக விரைவில் தமிழ்நாட்டின் சட்டமன்ற தேர்தல் நடக்க இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் நல்ல ஒரு அரசாங்கம் அமைய வேண்டும். ஜனங்களை சரியாக வழி நடத்த, நல்ல அரசியல் தலைவர்கள் ஆளுகையில் வர வேண்டும்.

இதற்காக நாம் ஜெபிக்க வேண்டும். நாலுமாவடி மற்றும் ஜெப மலையிலுள்ள ஜெபக் குழுக்களில் ஜெபிக்க ஆரம்பித்து விட்டோம். நீங்களும் உங்கள் தனி ஜெபத்தில், குடும்ப ஜெபத்தில், குழு ஜெபத்தில், திருச்சபையில், வரவிருக்கிற இந்தத் தேர்தலுக்காக தவறாமல் ஜெபிக்க ஆரம்பியுங்கள்.

தினமும் ஒரு 10 நிமிடங்களாவது தேர்தலுக்காக குறிப்பாக ஜெபிக்க வேண்டும். நீங்கள் ஜெபிப்பதற்கு வசதியாக, இந்த ஜெப புத்தகத்தை நாங்கள் தயாரித்திருக்கிறோம். இந்த ஜெப புத்தகத்தில் தேர்தலுக்காக என்னென்ன காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டும்? எப்படி ஜெபிக்க வேண்டும்? என்கிற அனேக விபரங்களும், ஜெபக் குறிப்புகளும் அடங்கி இருக்கிறது. இதை வைத்து, தினமும் கருத்தாக ஜெபியுங்கள்.

**"...உன்னதமான தேவன் மனுஷரின் இராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமானவனை அதின் மேல் அதிகாரியாக்குகிறார்..."** (தானியேல் 5:21) என்கிற இந்த வேத வசனத்தின்படி, கர்த்தருக்குச் சித்தமான அரசியல் தலைவர்கள் அதிகாரத்தில் வரும்படியாக நாம் ஜெபிக்க வேண்டும்.

தாங்கள் ஜெயிக்க வேண்டும் என்பதற்காக, சில கட்சியினர் மந்திரவாதம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்! நாம் ஜெபிக்கத் தவறி விட்டால், சாத்தான் தன்னுடைய திட்டங்களை நிறைவேற்றி விடுவான்.

ஏற்கெனவே ஆயிரக்கணக்கான தேவ பிள்ளைகள், வரவிருக்கிற இந்தத் தேர்தலுக்காக ஜெபிக்க தங்களை அர்ப்பணித்து, இந்த ஜெபத் திட்டத்தில் இணைந்து ஜெபிக்கிறார்கள்.

நீங்களும் இந்த ஜெப புத்தகத்தைப் பயன்படுத்தி, வரவிருக்கிற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்காக பாரத்தோடு ஜெபியுங்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியின் பெயரையும் கர்த்தருக்குத் தெரியப்படுத்தி, அந்தந்தத் தொகுதியில் கர்த்தராகிய தேவனுக்குச் சித்தமானவர்கள் மாத்திரம் தேர்ந்தெடுக்கப்படவும், இதற்கு விரோதமாக செயல்பட எத்தனிக்கிற சாத்தானின் சகல தந்திரங்களும் அழிக்கப்படவும் கருத்தாக ஜெபியுங்கள்.

நமது ஜெபம், சிங்காசனத்தில் வீற்றிருக்கும் கர்த்தருடைய கரத்தை செயல்பட வைக்கும். மட்டுமல்ல, தாம் ஒருவரே ராஜரீகம் பண்ணுகிற கர்த்தர் என்பதை இந்தத் தேர்தலில் நிரூபிப்பார்!

கர்த்தருக்கே மகிமை !

உங்கள் சகோதரன்,

Mohan C L.

(மோகன் சி. லாசரஸ்)

# பொதுவான தகவல்கள்:





| | |
|---|---|
| **மாவட்டங்கள்** | : 38 |
| **மொத்த மக்கள் தொகை** | : சுமார் 8 கோடி |
| **மொத்த வாக்காளர்கள்** (2020 நவம்பர்) | : 6,10,44,358 பேர்கள் |
| **ஆண்கள்** | : 3,01,12,370 பேர்கள் |
| **பெண்கள்** | : 3,09,25,603 பேர்கள் |
| **மூன்றாம் பாலினத்தவர்கள்** | : 6,385 பேர்கள் |
| **மொத்த சட்டமன்ற தொகுதிகள்** | : 234 |

## தமிழ்நாட்டிற்காக கர்த்தரை துதியுங்கள்!

1. தமிழ்நாட்டை கர்த்தர் நேசிக்கிறதற்காக, தமிழ்நாட்டிலிருந்து மகிமையான எழுப்புதலை உலகமெங்கிலும் அனுப்ப கர்த்தர் சித்தம் கொண்டதற்காக, அவரைத் துதியுங்கள்.

2. இதுவரை நடைபெற்ற எல்லா சட்டமன்றத் தேர்தல்களிலும் கர்த்தரின் கரம் செயல்பட்டதற்காக, தமக்குச் சித்தமானவர்களை தேர்தலில் வெற்றி பெறச் செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

3. இதுவரை தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்ட நல்ல பல திட்டங்களுக்காக, கர்த்தராகிய தேவன் நமது ஜெபங்களைக் கேட்டு, அரசியலில், அதிகாரத்தில் கிரியை செய்து வருகிறதற்காக

*தேவனை ஸ்தோத்தரிப்போம்.*



ஜெபக் குறிப்புகள்!

# பலவானை முந்திக் கட்டுங்கள்!

- தேர்தலில் கிரியை செய்து, தங்களுக்குச் சாதகமானவர்களை வெற்றி பெறச் செய்ய நினைக்கிற சாத்தானின் கிரியைகளைக் கட்டுங்கள். தமிழ்நாட்டில் கிரியை செய்கிற பலவானைக் கட்டி ஜெபியுங்கள்.

- தேர்தலில் ஜெயிக்க வேண்டும் என்பதற்காக செய்யப்படுகிற மந்திரவாதங்கள், பில்லி–சூனியங்கள், யாகங்கள் போன்றவைகளின் மூலம் கிரியை செய்கிற அசுத்த ஆவிகளை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கட்டுங்கள். அதை நம்புகிறவர்கள் வெட்கப்பட்டுப் போக வேண்டும்.

- தங்களுக்குச் சாதகமானவர்களை ஆளுகையில் கொண்டு வரத் துடிக்கிற கார்ப்பரேட் நிறுவன முதலாளிகளின் சதி ஆலோசனைகள் அபத்தமாக்கப்பட, அவர்களுக்குப் பின்னணியத்தில் இருந்து கொண்டு கிரியை செய்கிற எல்லா அசுத்த ஆவிகளும், அதன் கிரியைகளும் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

- தேர்தலில் வெற்றி பெறுவதற்காக, மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் நேரடியாகவும், மறைமுகமாகவும் கலவரங்களைத் தூண்டி, அதன் மூலம் வாக்காளர்களை தங்கள் பக்கம் இழுக்க நினைக்கும் இரத்த வெறி பிடித்த ஆவிகளைக் கட்டி ஜெபியுங்கள்.

- சமூக வலைத் தளங்கள், நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் போன்றவைகளில் வெளி வருகிற பொய்யான செய்திகளையும், வாக்குறுதிகளையும் நம்ப வைக்கிற அசுத்த ஆவிகளைக் கட்டி ஜெபியுங்கள்.

ஜெபக் குறிப்புகள்!

# மாநில தேர்தல் ஆணையத்திற்காக ஜெபிப்போம்.

- மாநில தலைமை தேர்தல் அதிகாரி அவர்களை கர்த்தர் ஆளுகை செய்திட ஜெபிப்போம்.

- தலைமை தேர்தல் அதிகாரியும், அவரது குழுவினரும் பாரபட்சமற்ற முறையில் தேர்தல் விதிகளை நடைமுறைப் படுத்துவதில் கண்டிப்புடன் நடந்து கொள்வதற்கு வேண்டிய மன தைரியத்தை கர்த்தர் அவர்களுக்குக் கட்டளையிட ஜெபிப்போம்.

- தேர்தலில் பணி புரியும் அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் (கலெக்டர்கள்) மற்றும் தேர்தல் அலுவலர்கள், வாக்குச் சாவடியில் இருக்கும் அரசு அலுவலர்கள் நடுநிலைமையோடு செயல்பட ஜெபிப்போம்.

- துணை இராணுவத்தினர், மாநில காவல் துறையினர், தேர்தல் பறக்கும் படையினர் பாரபட்சமின்றி செயல்பட ஜெபிப்போம்.



- வாக்குச் சாவடிகளில் பதற்றமில்லாமல் வாக்களிக்கும் சூழ்நிலை இருக்க ஜெபிப்போம்.

- ஓட்டு இயந்திரங்களை சூறையாடுவது, கள்ள ஓட்டுப் போடுவதை தடுத்திட கடுமையான சட்டங்கள் இயற்றப்பட ஜெபிப்போம்.

- வாக்குப் பதிவு இயந்திரங்களில் எந்தவிதமான மோசடி வேலைகள் நடைபெறாமலிருக்க ஜெபியுங்கள். அதில் ஈடுபடுகிறவர்கள் வெட்கப்பட்டுப்போக ஜெபியுங்கள்.



ஜெபக் குறிப்புகள்!

# சுமார் 6.10 கோடி
## வாக்காளர்களுக்காக ஜெபிப்போம்.



- வாக்காளர்களின் மனநிலை மற்றும் சிந்தையை ஆவியானவர் ஆளுகை செய்து, தம்முடைய சித்தத்திற்கு நேராக அவர்களைத் திருப்ப ஜெபிப்போம்.



- பணத்திற்காகவோ, கட்சிக்காகவோ, மதத்திற்காகவோ, ஜாதிக்காகவோ ஓட்டுப் போடாமல், தேசத்தின் நலன் கருதி மக்கள் வாக்களிக்க ஜெபியுங்கள்.

- பொய் பிரச்சாரங்கள், போலி வாக்குறுதிகள் மற்றும் மிரட்டல்களை நம்பி ஜனங்கள் வாக்களிக்காமல், உண்மை உள்ளவர்களுக்கு வாக்களிக்க ஜெபியுங்கள்.

- வாக்காளர்கள் அனைவரும் கடமை உணர்வோடு சரியான நேரத்தில் வாக்களிக்கவும், கள்ள ஓட்டுகள் போட முயற்சிக்கிற காரியங்கள் முற்றிலும் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

## ஜெபக் குறிப்புகள்!

# அரசியல் கட்சிகள், தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களுக்காக ஜெபிப்போம்.



### முக்கிய மாநில கட்சிகள்

| | |
|---|---|
| அ இ அ தி மு க | : திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி ( முதல்வர் வேட்பாளர் ) |
| தி மு க | : திரு. மு. க. ஸ்டாலின் ( முதல்வர் வேட்பாளர் ) |
| பாட்டாளி மக்கள் கட்சி | : டாக்டர்.ராமதாஸ் |
| இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி | : திரு. கே.எம். காதர் முகைதீன் |
| விடுதலை சிறுத்தைகள் கட்சி | : திரு. தொல்.திருமாவளவன் |
| மக்கள் நீதி மய்யம் | : திரு. கமல்ஹாசன் |
| நாம் தமிழர் கட்சி | : திரு. சீமான் |
| புதிய தமிழகம் கட்சி | : டாக்டர். கிருஷ்ணசாமி |
| அ ம மு க | : திரு. டி.டி.வி. தினகரன் |
| ம தி மு க | : திரு. வை. கோபால்சாமி |
| தே மு தி க | : திரு. விஜயகாந்த் |
| சமத்துவ மக்கள் கட்சி | : திரு. சரத்குமார் |
| தமிழ் மாநில காங்கிரஸ் | : திரு. ஜி.கே. வாசன் |

### முக்கிய தேசிய கட்சிகள்

| | |
|---|---|
| சி பி ஐ (எம்) | : திரு. ஜி. இராமகிருஷ்ணன் |
| சி பி ஐ | : திரு. ஆர். முத்தரசன் |
| இந்திய தேசிய காங்கிரஸ் | : கே. எஸ். அழகிரி (தமிழக தலைவர்) |
| பாரதிய ஜனதா கட்சி | : எல். முருகன் (தமிழக தலைவர்) |

மற்றும் பல சிறு கட்சிகளின் வேட்பாளர்களும், சுயேட்சை வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

- குற்றப் பின்னணி இல்லாதவர்கள், கொலை, கொள்ளை மற்றும் வன்முறைகளில் ஈடுபடாதவர்கள், சுயநலமில்லாதவர்கள், மக்கள் நலனைப் பற்றிச் சிந்திப்பவர்கள் மட்டுமே வேட்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- அனைத்து விதமான கிரிமினல் குற்றவாளிகளும் அரசியலை விட்டே அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜெபியுங்கள்.

ஜெபக் குறிப்புகள்!

# விழிப்புணர்வு அலை உண்டாக ஜெபிப்போம்!

- தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும், தேவனுக்குப் பயந்து நடக்கிற, நேர்மையுள்ள, பண ஆசையில்லாத நபர்கள் வேட்பாளராக போட்டியிட ஜெபிப்போம்.

- ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிட இருக்கும் கட்சி சார்ந்த வேட்பாளர்கள், சுயேட்சை வேட்பாளர்களுக்காக ஜெபிப்போம்.

- வாக்குரிமை உள்ள அனைவர்களும் தேசத்தை நேசிக்கிறவர்களாக தங்கள் ஜனநாயக கடமையை நிறைவேற்ற ஓட்டுபோட வேண்டும் என்ற எண்ணம் உருவாக ஜெபியுங்கள்.

- கட்சிகள் வகுக்கும் தேர்தல் வியூகங்கள், ஜனங்களை நம்பப் பண்ணும்படியான போலியான வாக்குறுதிகள் மற்றும் சமூக வலைத் தளங்கள், பத்திரிக்கை, டி.வி. வாயிலாக நடைபெறுகிற பொய் பிரச்சாரங்களை மக்கள் அடையாளம் கண்டுகொள்ள ஜெபிப்போம்.

- 'பணம்! ஜாதி அடிப்படையிலான ஓட்டுகள்! மற்றும் கட்சிப் பெரும்பான்மையை வைத்து ஜெயித்து விடலாம்!' என்று திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறவர்களின் மனக் கணக்குகள் பொய்யாகிப் போக ஜெபிப்போம்.

- ஏழை-எளிய மக்கள், அப்பாவி ஜனங்கள், போதை மற்றும் குடிப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களின் வாக்குகளைப் பெற, சில அரசியல்வாதிகள் பொய்யாக அறிவிக்கும் திட்டங்கள் மற்றும் சலுகைகளால் மக்கள் மதி மயங்கி விடாதிருக்க ஜெபிப்போம்.

- தமிழ்நாட்டிலுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட அனைத்து வாக்காளர்களுக்காக, (ஆண்கள், பெண்கள் மற்றும் புதிய வாக்காளர்களுக்காக) அவர்களின் மனதில் தெளிவும், விழிப்புணர்வும் உண்டாக ஜெபிப்போம்.

- ஜனங்கள் மத்தியில்,'ஓட்டுக்குப் பணம் வாங்குவது பாவம்! அது தேசத் துரோகம்!' என்கிற விழிப்புணர்வை கர்த்தர் ஏற்படுத்த ஜெபிப்போம்.

# தேவன் விரும்பும் அரசாங்கம் அமைய ஜெபியுங்கள்

- லஞ்சம், ஊழல்களை முற்றிலும் வெறுக்கிற, பண ஆசை இல்லாத முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைந்த அரசாங்கம் அமைய ஜெபியுங்கள்.
- டாஸ்மாக் மதுபானக் கடைகளை முற்றிலும் மூடுகிற, மதுபான ஆலைகளை மூடுகிற, பூரண மதுவிலக்கு கொண்டு வருகிற நல்ல அரசாங்கம் அமைய ஜெபியுங்கள்.
- தேவ ஞானத்தால் நிரப்பப்பட்ட (யோசேப்பு, தானியேல் போல), தேவனுக்கு பயப்பட்டு காரியங்களை நிறைவேற்றுகிற தலைவர்கள் மாத்திரம் சட்ட சபைக்குள் நுழைய ஜெபியுங்கள்.
- ஜாதிகளுக்கு, குறிப்பிட்ட மதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காத எல்லோரையும் ஒன்று போல நேசிக்கிற தலைவர்கள் மாத்திரம் ஆளுகையில் வர ஜெபியுங்கள்.
- நேர்மையான, உண்மையான, திறமையான அதிகாரிகளை (IAS, IPS) கனப்படுத்தி அவர்களை பயன்படுத்துகிற, அவர்களை சுதந்தரமாக செயல்பட வைக்கிற அரசாங்கம் அமைய ஜெபியுங்கள்.
- வறுமைகளை, பசி பட்டினிகளை ஒழிக்கிற, அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கிற எல்லோருக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்குகிற, தொழில் வளங்களை பெருக்குகிற வாஞ்சையுள்ள தலைவர்கள் வெற்றிபெற்று ஆட்சிக்குவர ஜெபியுங்கள்.
- விவசாயிகள், மீனவர்கள், சிறு குறு தொழில் செய்வோர்கள் யாரும் பாதிக்கப்படாமல், அவர்களுடைய வாழ்வாதாரங்களை உயர்த்த பாடுபடுகிற அரசாங்கம் அமைய ஜெபியுங்கள்.
- மக்களை பாதிக்கிற தொழில்களை கொண்டு வருகிற சுயநலமுள்ள கார்ப்பரேட் நிறுவனங்களை அனுமதிக்காத, அவர்களை தடை செய்கிற அரசாங்கம் அமைய ஜெபியுங்கள்.
- மாணவர்களை, வருங்கால சந்ததியை பாதிக்காத வகையில் கல்வித்துறையை மேம்படுத்துகிற, ஏழை பிள்ளைகளும் தரமான உயர்கல்வியை பெறுவதற்கு வழி வகைகளை செய்கிற அரசாங்கம் அமைய ஜெபியுங்கள்.
- சிறு பிள்ளைகள், வாலிப் பெண்கள், பெண்கள் இவர்களின் பாதுகாப்பிற்காக பாடுபடுகிற, சட்ட ஒழுங்குகளை பாதுகாக்கிற, சமுதாய சீரழிவுகளை தடுக்கிற அரசாங்கம் அமைய ஜெபியுங்கள்.
- வறுமையினிமித்தம் தெருவோரங்களில் வசிப்போர், பாலியல் தொழிலில் ஈடுபடுவோர், குழந்தை தொழிலாளர்கள் இவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து கொடுத்து அவர்களின் வாழ்க்கை தரம் உயர பாடுபடுகிற அரசாங்கம் அமைய ஜெபியுங்கள்.

# மாவட்டம் வாரியாக தொகுதிகளின் வரிசைப் பட்டியல்

மாவட்டங்கள்: 38 | மொத்த சட்டமன்றத் தொகுதிகள்: 234

**திருவள்ளூர் - தொகுதிகள் (6)**
1. கும்மிடிப்பூண்டி, 2. பொன்னேரி, 3. திருத்தணி, 4.திருவள்ளூர்,
5. பூந்தமல்லி, 6. ஆவடி.

**சென்னை - தொகுதிகள் (22)**
7. மதுரவாயல், 8. அம்பத்தூர், 9. மாதவரம், 10. திருவொற்றியூர்,
11. ஆர்.கே.நகர், 12. பெரம்பூர், 13. கொளத்தூர், 14, வில்லிவாக்கம்,
15. திரு.வி.க.நகர், 16. எழும்பூர், 17. இராயபுரம், 18. துறைமுகம்,
19. சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி, 20. ஆயிரம் விளக்கு,
21. அண்ணா நகர், 22. விருகம்பாக்கம், 23. சைதாப்பேட்டை,
24. தியாகராய நகர், 25. மைலாப்பூர், 26. வேளச்சேரி,
27. சோழிங்கநல்லூர், 28. ஆலந்தூர்

**செங்கல்பட்டு - தொகுதிகள் (6)**
30. பல்லாவரம், 31. தாம்பரம், 32. செங்கம் , 33. திருப்போரூர்,
34. செய்யூர், 35. மதுராந்தகம்.

**காஞ்சிபுரம் - தொகுதிகள் (3)**
29. ஸ்ரீபெரும்புதூர், 36. உத்திரமேரூர், 37. காஞ்சிபுரம்

**இராணிப்பேட்டை - தொகுதிகள் (4)**
38. அரக்கோணம், 39. சோழிங்கர், 41. ராணிப்பேட்டை, 42. ஆற்காடு

**வேலூர் - தொகுதிகள் (5)**
40. காட்பாடி, 43. வேலூர், 44. அணைக்கட்டு, 45. கீழ்வைத்தினாங்குப்பம்,
46. குடியாத்தம்.

**திருப்பத்தூர் - தொகுதிகள் (4)**
47. வாணியம்பாடி, 48. ஆம்பூர், 49. ஜோலார்பேட்டை,
50. திருப்பத்தூர் (வேலூர்)

## கிருஷ்ணகிரி - தொகுதிகள் (6)

51. ஊத்தங்கரை, 52. பர்கூர், 53. கிருஷ்ணகிரி, 54. வேப்பனஹள்ளி, 55. ஓசூர், 56. தளி

## தருமபுரி - தொகுதிகள் (5)

57. பாலக்கோடு, 58. பென்னாகரம், 59. தருமபுரி, 60. பாப்பிரெட்டிபட்டி, 61. அரூர்,

## திருவண்ணாமலை - தொகுதிகள் (8)

62. செங்கம், 63. திருவண்ணாமலை, 64. கீழ்பெண்ணாத்தூர், 65. கலசப்பாக்கம், 66. போளூர், 67. ஆரணி, 68. செய்யார், 69. வந்தவாசி.

## விழுப்புரம் - தொகுதிகள் (6)

70. செஞ்சி, 71. மைலம், 72. திண்டிவனம், 73. வானூர், 74. விக்கிரவாண்டி, 75. விழுப்புரம்.

## கள்ளக்குறிச்சி - தொகுதிகள் (5)

76. திருக்கோவிலூர், 77. உளுந்தூர்பேட்டை, 78. ரிஷிவந்தியம், 79. சங்கராபுரம், 80. கள்ளக்குறிச்சி

## சேலம் - தொகுதிகள் (11)

81. கெங்கவள்ளி, 82. ஆத்தூர், 83. ஏற்காடு, 84. ஓமலூர், 85. மேட்டூர், 86. எடப்பாடி, 87. சங்ககிரி, 88. சேலம் (மேற்கு), 89. சேலம் (வடக்கு), 90. சேலம் (தெற்கு), 91. வீரபாண்டி,

## நாமக்கல் - தொகுதிகள் (6)

92. இராசிபுரம், 93. சேந்தமங்கலம், 94. நாமக்கல், 95. பரமத்தி வேலூர், 96. திருச்செங்கோடு, 97. குமாரபாளையம்,

## ஈரோடு - தொகுதிகள் (8)

98. ஈரோடு (கிழக்கு), 99. ஈரோடு (மேற்கு), 100. மொடக்குறிச்சி, 101. பெருந்துறை. 102. பவானி, 103. அந்தியூர், 104. கோபிச்செட்டிப்பாளையம், 105. பவானிசாகர்.

**திருப்பூர் – தொகுதிகள் (8)**

106. தாராபுரம், 107. காங்கேயம், 108. அவினாசி, 109. திருப்பூர் (வடக்கு),
110. திருப்பூர் (தெற்கு), 111. பல்லடம், 112. உடுமலைப்பேட்டை,
113. மடத்துக்குளம்.

**நீலகிரி – தொகுதிகள் (3)**

114. உதகமண்டலம் (ஊட்டி), 115. குன்னூர், 116. கூடலூர்,

**கோயம்புத்தூர் – தொகுதிகள் (10)**

117. மேட்டுப்பாளையம், 118. சூலூர், 119. கவுண்டம்பாளையம்,
120. கோயம்புத்தூர் (வடக்கு), 121. தொண்டாமுத்தூர்,
122. கோயம்புத்தூர் (தெற்கு), 123. சிங்காநல்லூர், 124. கிணத்துக்கடவு,
125. பொள்ளாச்சி, 126. வால்பாறை.

**திண்டுக்கல் – தொகுதிகள் (7)**

127. பழனி, 128. ஒட்டன்சத்திரம், 129. ஆத்தூர், 130. நிலக்கோட்டை,
131. நத்தம், 132. திண்டுக்கல், 133. வேடசந்தூர்.

**கரூர் – தொகுதிகள் (4)**

134. அரவக்குறிச்சி, 135. கரூர், 136. கிருஷ்ணராயபுரம், 137. குளித்தலை.

**திருச்சி – தொகுதிகள் (9)**

138. மணப்பாறை, 139. ஸ்ரீரங்கம், 140. திருச்சி (மேற்கு).
141. திருச்சி (கிழக்கு), 142. திருவெறும்பூர், 143. லால்குடி,
144. மணச்சநல்லூர், 145. முசிறி, 146. துறையூர்.

**பெரம்பலூர் – தொகுதிகள் (2)**

147. பெரம்பலூர். 148. குன்னம்.

**அரியலூர் – தொகுதிகள் (2)**

149. அரியலூர், 150. ஜெயங்கொண்டம்.

## கடலூர் – தொகுதிகள் (9)

151. திட்டக்குடி, 152. விருதாச்சலம், 153. நெய்வேலி, 154. பண்ருட்டி, 155. கடலூர், 156. குறிஞ்சிப்பாடி, 157. புவனகிரி, 158. சிதம்பரம், 159. காட்டுமன்னார்கோவில்.

## மயிலாடுதுறை – தொகுதிகள் (3)

160. சீர்காழி, 161. மயிலாடுதுறை, 162. பூம்புகார்

## நாகப்பட்டினம் – தொகுதிகள் (3)

163. நாகப்பட்டினம், 164. கீழ்வேளூர், 165. வேதாரண்யம்.

## திருவாரூர் – தொகுதிகள் (4)

166. திருத்துறைப்பூண்டி, 167. மன்னார்குடி, 168. திருவாரூர். 169. நன்னிலம்

## தஞ்சாவூர் – தொகுதிகள் (8)

170. திருவிடைமருதூர், 171. கும்பகோணம், 172. பாபநாசம், 173. திருவையாறு, 174. தஞ்சாவூர், 175. ஒரத்தநாடு, 176. பட்டுக்கோட்டை, 177. பேராவூரணி,

## புதுக்கோட்டை – தொகுதிகள் (6)

178. கந்தர்வக்கோட்டை, 179. விராலிமலை, 180. புதுக்கோட்டை, 181. திருமயம், 182. ஆலங்குடி, 183. அறந்தாங்கி.

## சிவகங்கை – தொகுதிகள் (4)

184. காரைக்குடி, 185. திருப்பத்தூர் (சிவகங்கை) 186. சிவகங்கை, 187. மானாமதுரை.

## மதுரை – தொகுதிகள் (10)

188. மேலூர், 189. மதுரை (கிழக்கு), 190. சோழவந்தான், 191. மதுரை (வடக்கு), 192. மதுரை (தெற்கு), 193. மதுரை (சென்ட்ரல்), 194. மதுரை (மேற்கு), 195. திருப்பரங்குன்றம், 196. திருமங்கலம், 197. உசிலம்பட்டி.

**தேனி – தொகுதிகள் (4)**

198. ஆண்டிபட்டி, 199.பெரியகுளம், 200. போடி நாயக்கனூர், 201. கம்பம்.

**விருதுநகர் – தொகுதிகள் (7)**

202. இராஜபாளையம், 203. ஸ்ரீவில்லிபுத்தூர், 204. சாத்தூர், 205. சிவகாசி, 206. விருதுநகர், 207. அருப்புக்கோட்டை, 208. திருச்சுழி,

**இராமநாதபுரம் – தொகுதிகள் (4)**

209. பரமக்குடி, 210. திருவாடனை, 211. இராமநாதபுரம், 212. முதுகுளத்தூர்,

**தூத்துக்குடி – தொகுதிகள் (6)**

213. விளாத்திகுளம், 214. தூத்துக்குடி, 215. திருச்செந்தூர், 216. ஸ்ரீவைகுண்டம், 217. ஓட்டப்பிடாரம், 218. கோவில்பட்டி

**தென்காசி – தொகுதிகள் (5)**

219. சங்கரன்கோவில், 220. வாசுதேவநல்லூர், 221. கடைய நல்லூர், 222. தென்காசி, 223. ஆலங்குளம்

**திருநெல்வேலி – தொகுதிகள் (5)**

224. திருநெல்வேலி, 225. அம்பாசமுத்திரம், 226. பாளையங்கோட்டை, 227. நாங்குநேரி, 228. இராதாபுரம்

**கன்னியாகுமரி – தொகுதிகள் (6 )**

229. கன்னியாகுமரி, 230. நாகர்கோவில், 231. குளச்சல், 232. பத்மநாபபுரம், 233. விளவங்கோடு, 234. கிள்ளியூர்.

**ஒவ்வொரு மாவட்டங்களின்**
**சட்டமன்ற தொகுதிகளின்**
**பெயரை சொல்லி ஜெபியுங்கள்.**

# இயேசுவே!

## தமிழ்நாட்டுக்கு
## நல்ல தலைவர்களை
## எழுப்பித் தாரும்!




*- This Map Not to Scale - For Prayer Purpose Only*

Jesus Redeems MINISTRIES
Nalumavadi - 628211, Thoothukudi Dist.,
Tamilnadu, India. Phone: +91 4639-220022
Email: info@jesusredeems.org